# வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் - 06 | சைவநெறி | நேரம் - 2 மணித்தியாலம்

### பகுதி - I

- 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" எனப் போற்றப்படும் கடவுள்.
(1) முருகன் (2) சிவன் (3) திருமால் (4) கணபதி

2) தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்.
(1) நரகாசுரன் (2) கஜமுகாசுரன் (3) சிங்கமுகாசுரன் (4) தாரகாசுரன்

3) காதுகுத்துதல் சடங்கு வேறு எப்பெயரால் அழைக்கப்படும்.
(1) நாமகரணம் (2) கர்ணவேதனம் (3) தூயவேதனம் (4) சாமவேதனம்

4) பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய தீர்த்தம்
(1) பாலாவி (2) சமுத்திரம் (3) கண்டகி (4) திருவடி

5) திருநாவுக்கரசு நாயனார் முத்தியடைந்த தினம்.
(1) சித்திரைச் சதயம் (2) வைகாசி மூலம் (3) ஆடிச்சுவாதி (4) ஆனிமகம்

6) "பூசுவதும் வெண்ணீறு....." எனும் பதிகம் பாடியவர்.
(1) ஆளுடையநம்பி (2) ஆளுடையஅரசு (3) ஆளுடையஅடிகள் (4) ஆளுடையபிள்ளை

(7) சிவதரிசன பலனைத் தருபவர்.
(1) வைரவர் (2) சண்டேஸ்வரர் (3) சிவலிங்கம் (4) விநாயகர்

(8) "ஓசையொலியெலாம் ஆனாய் நீயே ......" எனும் பதிகம் பாடப்பட்ட தலம்.
(1) திருவையாறு (2) திருவாரூர் (3) தில்லை (4) திருவாவடுதுறை

(9) கோபுரத்தில் தசாவதாரங்களை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள ஆலயம்.
(1) நல்லூர் கந்தசுவாமி கோயில் (2) பத்திரகாளி அம்மன் ஆலயம்
(3) சீதை அம்மன் ஆலயம் (4) மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்

(10) நம்பியாண்டார் நம்பி அவதரித்த ஊர்.
(1) திருவாரூர் (2) திருநாவலூர் (3) திருநாரையூர் (4) திருவதிகை

(11) ஞானப்பிரகாச முனிவர் பிறந்த ஆண்டு
(1) கி.பி 1621 (2) கி.பி. 1624 (3) கி.பி. 1625 (4) கி.பி. 1601

(12) நம்பியாரூர் பாடிய முதற் பதிகம்.
(1) தோடுடைய செவியன் (2) பித்தா பிறைசூடி
(3) கூற்றாயினவாறு (4) காதலாகிக் கசிந்து

(13) தட்சணகைலாயம் எனப் போற்றப்படும் தலம்.
(1) முன்னேஸ்வரம் (2) நகுலேச்சரம் (3) திருக்கோணேச்சரம் (4) கேதீச்சரம்

(14) பஞ்சபுராணம் ஓதும்போது மூன்றாவதாகப் பாடப்படுவது.
(1) திருவிசைப்பா (2) திருவாசகம் (3) பெரியபுராணம் (4) திருப்பல்லாண்டு

(15) பெரியபுராணம் பாடியவர்
(1) சேந்தனார் (2) சேதிராயர் (3) திருமூலர் (4) சேக்கிழார்

(16) "பந்தித்து நிற்பது" எனும் பொருளைத் தருவது
(1) பதி (2) பசு (3) கன்மம் (4) பாசம்

(17) "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறியவர்.
(1) சேக்கிழார் (2) ஔவையார் (3) நாவலர் (4) வள்ளுவர்



kalvi.lk

(18) விநாயகப் பெருமானுக்கு மிகவும் விருப்பமானது.
(1) அறுகம்புல் (2) மோதகம் (3) அவல் (4) கடலை

(19) முச்சுடர்கள் எனப்படுபவை
(1) சூரியன், சந்திரன், வர்ணன் (2) சந்திரன், வாயு, வர்ணன்
(3) சூரியன், சந்திரன், அக்கினி (4) அக்கினி, வாயு, உஷை

(20) திருப்பல்லாண்டு பாடியவர்
(1) திருமூலர் (2) சேக்கிழார் (3) சேந்தனார் (4) மாணிக்கவாசகர்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

- முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(1) (i) பின்வரும் திருமுறைப் பாடல்களில் **இரண்டினை** வரிக்கிரமமாக எழுதுக.
(ii) அவற்றைப் பாடியவர், தலம் என்பவற்றைத் தருக.
(அ) "பித்தாபிறை சூடி ........." (ஆ) "ஒளிவளர் விளக்கே ......"
(இ) "இடரினுந் தளரினும் ......" (ஈ) "சீரும் திருவும் ........"

(6+1+1=8 x 2 = 16 புள்ளிகள்)

(2) **"வாழ்வில் இறையுணர்வையும் புனிதத் தன்மையையும் ஏற்படுத்துவன விரதங்கள்"**
(i) விரதம் என்றால் என்ன என்பதை நாவலர் எவ்வாறு குறிப்பிடுகின்றார்?
(ii) விரதங்களை அனுஷ்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய பொதுவான நியதிகள் **மூன்று** தருக.
(iii) விரதம் அனுஷ்டிப்பவர்கள் விரத காலங்களில் தவிர்க்க வேண்டிய செயல்கள் **நான்கு** தருக.

(3+4+4 = 11 புள்ளிகள்)

(3) **"முப்பொருள்களும் என்றும் உள்ளவை"**
(i) முப்பொருள்களும் யாவை?
(ii) சைவசித்தாந்தம் குறிப்பிடும் பசுவின் இயல்புகள் **மூன்று** தருக.
(iii) சைவசித்தாந்தம் குறிப்பிடும் பாசங்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(3+4+4 = 11 புள்ளிகள்)

(4) **"இறைவன் மீது பக்தி கொண்டு திருமுறைகளை அருளியவர்கள் நாயன்மார்கள்."**
(i) திருநாவுக்கரசு நாயனாரின் தந்தை, தாய், இளமைப்பெயர் என்பவற்றைத் தருக.
(ii) திருநாவுக்கரசருக்கு சமணர்கள் செய்த கொடுமைகள் **மூன்று** தருக.
(iii) திருநாவுக்கரசரும் திருஞானசம்மந்தரும் இணைந்து ஆற்றிய அற்புதங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(3+4+4 = 11 புள்ளிகள்)

(5) **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று."**
(i) திருக்கோணேஸ்வர ஆலய இறைவன், இறைவி பெயர்களைக் குறிப்பிடுக.
(ii) மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய மகோற்சவத்திருவிழா எப்போது நடைபெறுகின்றது?
(iii) பறாளை ஈஸ்வர விநாயகரது அற்புதங்களில் ஒன்றினைக் குறிப்பிடுக?

(3+4+4 = 11 புள்ளிகள்)

(6) **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"**
(i) விழுமியம் என்றால் என்ன?
(ii) சமயம் சார்ந்த மனிதப் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iii) பெரியோரகளின் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?

(3+4+4 = 11 புள்ளிகள்)

(7) பின்வருவனவற்றுள் **இரண்டிற்குச்** சிறு குறிப்பு எழுதுக
(i) தைப்பொங்கல்
(ii) திருப்புகழ்
(iii) வாழ்வியற் சடங்குகள்
(iv) சைவசித்தாந்தத்தில் பதி

(3+4+4 = 11 புள்ளிகள்)

*******



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page